Registered as a News Paper பக்கங்கள்: 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 21 (04-02-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 351


## திட்டமிட்டபடி பெப். 15-ல் எழுதுவினைஞர் பரீட்சை

யாழ். மாவட்ட அமைய எழுதுவினைஞர் பதவிக்கான போட்டிப் பரீட்சை திட்டமிட்டபடி எதிர்வரும் பதினைந்தாம் திகதி நடைபெறும் என யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். மேற்படி பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் எதிர்வரும் ஆறாம் திகதி அனுப்பி வைக்கப்படும். இப்பரீட்சைக்கு தோற்றுவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# அமெ. மனித உரிமை நிறுவனங்கள் இந்தியா மீது பலத்த கண்டனம்

## வலுக்கட்டாயமாக அகதிகளை அனுப்புவது மனித நேயமற்ற செயல்

(வாஷிங்டன்)

இலங்கைத் தமிழ் அகதிகளை யுத்தப் பிரதேசங்களுக்கு வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பும் இந்தியாவின் மனிதநேயமற்ற செயலை இரு பிரபல்யமான அமெரிக்க மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்துள்ளன.

சிறிலங்காவில் வன் செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டும் மற்றும் மனித உரிமைகள் மீறப்படும் இந்த வேளையில் இந்திய அரசு தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது 'விபரீதமானது' என்று அமெரிக்காவில் இயங்கும் அகதிகளுக்கான குழு தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற இந்தக் குழு உலகம் பூராகவுமுள்ள அகதிகள் நிலை குறித்து அமெரிக்க காங்கிரசுக்கு அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிப்பது வழக்கம்.

பலாத்காரமாக இலங்கைத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி பற்றிஆலோசிக்க இந்தியதூதர் கோரிக்கை

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சமரசத் தீர்வொன்றைக் காண்பதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையை நடைமுறைப்படுத்துவது பற்றி மக்களை ஆலோசிக்குமாறு இந்திய உயர் ஸ்தானிகர் என். என். ஜா ஐலன்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அரசியல் அமைப்புத் திட்டத்துக்கான 13 - வது திருத்தத்தில் சமஷ்டி அமைப்பின் அம்சங்கள் பல இடம் பெற்றுள்ளன. இதுதான் சமஷ்டி ஆட்சி முறை என்று அழுத்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்படை சுட்டு கொலை

சவளக்கடை பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றதாக தெரியவருகிறது.

## மகஸீன் சிறைச்சாலையில் தமிழ்ப் பெண் மர்மமரணம்

கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தமிழ்ப் பெண் மர்மமாக மரணமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம் பகுதியைச் சேர்ந்த நாதன் விமலாதேவி என்ற பெண்ணே மர்மமாக மரணமடைந்துள்ளார்.

கடந்த நவம்பர் 7 ஆம் திகதி மின்கலப் பொருளை வடபகுதிக்கு கொண்டுசெல்ல முயற்சி செய்தார் என்ற சந்தேகத்தில் குறிப்பிட்ட பெண்ணுடன் சேர்த்து மூன்று பெண்

(3ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை அகதிமுகாமில் தமிழர்கள் திடீர் மறைவு

பேசாலை அகதி முகாமில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் அங்கிருந்து மர்மமான முறையில் கடத்தப்பட்டு கொலை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. முகாமுக்கு அண்மையில் உள்ள இராணுவ முகாமிலிருந்து வரும் இராணுவத்தினரும் அங்குள்ள தமிழ் மக்களை கைது செய்து கொண்டு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

## விவசாய அபிவிருத்தி குறித்த வயல்விழா

(யாழ்ப்பாணம்)

விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தவும் புதிய விவசாய ஆய்வுகளையும், நடைமுறைகளையும் விவசாயிகள்மததியில் விஸ்தரிப்பதற்காகவும் திரு நெல்வேலி விவசாயஆராய்ச்சி நிலையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட வயல் விழா நேற்று மேற்படி நிலையத்தில் நடைபெற்றது.

விவசாய ஆராய்ச்சித் திணைக்கள விவசாயஆராய்ச்சிப் பிரதிப் பணிப்பாளர் திரு. டாக்டர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மகேந்திரராசா மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப்பிரிவு பிரமுகர் திரு. பாலகுமார், யாழ். மாவட்டத்தளபதி திரு. செந்தாளன், யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை காவல் பணிமனை இன்று திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழக் காவல் துறையினரின் பருத்தித்துறை காவல் பணிமனை இன்று காலை 7 மணியளவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுவரும் காவல் பணிமனைகளின் வரிசையில் இதுவும் ஒன்று. இன்றுமுதல் பொது மக்கள் இவ்வலுவலகத்தில் தமது முறையீடுகளைச் செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## லில்லிவில்லியில் பொருள் இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ். மாவட்டபாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி பாடப்புத்தகங்களுடன் லில்லி வில்லி கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடைந்தது. இதில் வடபகுதிக்கான தபால் பொதிகளும் உணவுப் பொருள்களும் கொண்டு வரப்பட்டுள்ளன. இக்கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலை நேற்றுக் காலை முதல் ஆரம்பமானது. (ச)

## பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணை வீச்சு

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு பலத்த எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. குப்பிளான் ஏழாலைப் பகுதிகளில் இவை வீழ்ந்து வெடித்தன.

சேந்தான் குளம் கடற்பகுதியில் நிலைகொண்டிருந்த கடற்படை பீரங்கிப் படகுகள் கீரிமலை, சேந்தாங்குளம்பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை நடாத்தியுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவாளர்கள் போராட்டத்திற்கு ஆதரவு

நாளை ஐந்தாம்திகதி நடைபெறவிருக்கும் வெகுஜனப் போராட்டத்தில் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும் கலந்து கொண்டுபோராட்டம் வெற்றி பெறப் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை கேட்டுள்ளது.

நாளைய தினம் சகல கூட்டுறவுச் சங்கங்களும் போராட்டத்தில் பங்குபற்றுவதற்கு வசதியாகப் பூட்டப்படல் வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## வல்வைக் கடலில் மீனவர் மீது சூடு

வல்வெட்டித்துறையில் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடலில் பாய்ந்த கடற்தொழிலாளர்கள் தமது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களை கலந்துகொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசின் அடக்கு முறைகளை அம்பலப்படுத்தவும் தமிழீழ மக்களின் வேதனைகளை வெளிக் காட்டவும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்ட எழுச்சி ஊர்வலத்தில் அனைதது ஆசிரியர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பழுதான சீன கவச வண்டிகள் ராணுவத்திற்கு புதிய நெருக்கடி

## வடக்கு யுத்தத்தை பாதிக்குமாம்

(கொழும்பு)

சீனாவில் கொள்வனவுசெய்யப்பட்ட காலாற்படைக்கான பல கவச வாகனங்கள் இயக்க முடியாத அளவிற்கு பழுதடைந்துள்ளதால் சிறிலங்கா இராணுவத்திற்கு புதிய சிக்கலை உருவாக்கியுள்ளது. சிறிலங்காவின் காலாற்படையின் கவச வாகன அணிகளுக்கு இது ஒரு நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. இதன் காரணமாக வடக்கு கிழக்கு யுத்தத்தில் கவச வண்டிகளை பயன் படுத்த முடியாத நிலைமை உருவாகியுள்ளதாக கவச படையணியின் தளபதி கூறியுள்ளார்.

சீனத் தயாரிப்பான கவச வாகனங்களுக்கு உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் அறவே கிடைக்காதிருப்பது

(6 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
முல்லைத்தீவுக் கிளை.

## வருடாந்தப் பொதுக் கூட்டம் 1992
## அழைப்பிதழ்

இடம்: மு'புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம்
காலம்: 09-02-1992 ஞாயிறு காலை 9-00 மணி

நிகழ்ச்சி நிரல்:
1. இறை வணக்கம்
2. வரவேற்புரை.
3. தலைமையுரை - வைத்திய கலாநிதி திரு.க.சண்முகநாதன் அவர்கள்.
4. ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்.
5. நிதி அறிக்கை சமர்ப்பித்தல்.
6. சிறப்புரை :-
   1. திரு. சி. தயாளதேவ் அவர்கள் (உதவிப்பணிப் பாளர், நிவாரணம் இ. செ. சி. சங்கம்)
   2. திரு. சி. சிவானந்தராசா அவர்கள் (கௌரவ செயலாளர் இ. செ. சி.சங்க யாழ் - கிளை)
7. பிரேரணைகள் நிறைவேற்றல்.
8. நன்றியுரை.

- மதிய இடைவேளை -

9. புதிய நிர்வாகிகள் தெரிவு

நன்றி.

புதுக்குடியிருப்பு. க. கதிரவேலு
கௌரவ செயலாளர்
(2176)

---

ஆண் தமிழ் தட்டெழுத்தாளர்

## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல நிறுவன மொன்றிற்கு ஆண் தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. தகுந்த ஆவணங்களுடன் 07-02-92 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஈழநாதம் காரியாலயத்திற்கு வரவும். வேதனம் நேரில் பேசிக்கொள்ளலாம்.

(சி/3880)

---

யாழ்-பிராந்திய
சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

## வெகுஜனப்போராட்டம் பற்றிய
## அறிவித்தல்


யாழ்-பிராந்தியத்தைச் சேர்ந்த அனைத்து சிகை அலங்கரிப்பாளர்களும் (நிலைய உரிமையாளர், தொழிலாளர், (ஊர்த்தொழிலாளர்) 5-2-92 புதன்கிழமை தொழில்களை நிறுத்தி காலை 7-மணிக்கு சங்க காரியாலயத்திற்கு வரவும்.

காலை 7-30 மணிக்கு யாழ்-கச்சேரி நோக்கி ஊர்வலம் ஆரம்பமாகும். காரியாலயத்தில் வருகை பற்றிய பதிவு செய்யப்பட இருக்கிறது.

அ. அல்பேட், சி. இராசேந்திரம்
தலைவர் (சி 3883) செயலாளர்.

---

## 13-ம் மாத நினைவஞ்சலி



தோற்றம்
25-10-1951

மறைவு
16-12-1990

அமரர்
### மூத்ததம்பி சிறீஸ்கந்தராசா

எந்தையே உமை நினைத்து
சிந்தை உருகுதையா
வெந்தணலில் புழுப்போல
வேதனையில் வாடுகின்றோம்
எந்நாளும் உம் நினைவை
இப்புவியில் வாழ வைப்போம்
என்பதனால் அமைதி கொள்ளும்
ஆன்மா அமைதி பெற
ஆண்டவனை இறைஞ்சுகிறோம்

மனைவி, மகன்: சிறீரங்கன், தந்தை:மூத்ததம்பி, அக்கா, அத்தான். பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்
(2168)

---

# தென்னிலங்கையில் கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகின்றன

(கொழும்பு)

தென் பகுதி அரசியல்வாதிகள் பொதுத்தேர்தல் ஒன்றை சந்திப்பதற்குத் தயாராகிவருகின்றனர். தமக்கு முன்னே இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பதற்கு வசதியாகப் புதிய மாறுவேடம் தரித்து தேர்தலைச் சந்திக்கத் தயாராகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சி ஆகிய இரு பிரதான அரசியல் கட்சிகளுமே மேற்படி நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளன. இவ்வாறு தென்பகுதியில் இருந்து வெளிவரும் நேற்றைய ''லங்கா தீப'' என்ற சிங்கள வார இதழில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை அமைச்சரவையில் அங்கம்வகிக்கும் ஐந்து அமைச்சர்கள் மீது விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக்கொண்டுவர இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்ததாகவும் இப் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது. இந்த அமைச்சர்களது பெயர்விபரம் மிகவும் இரகசியமாக வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மீனவர்மீது துப்பாக்கிச்சூடு;

யாழ். குடாக்கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களை நோக்கி மண்டைதீவு, கல்முனைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால்நேற்றும் கடற்றொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை தொடக்கம்! இப்பகுதியில்நிலை கொண்டிருந்த பீரங்கிப்படகுகள் நேற்றுமுன்தினமிரவு விலகிச்சென்றுவிட்டனஎனத்தெரிவிக்கப்படுகிறது. நாலாவது நாளாகக் குடாக்கடலில் கடற்தொழில்பாதிக்கப்பட்டுள்ளது

## வெகுசனப் போராட்டத்திற்கு அழைப்பு

(குருநகர்)

நாளை (5-2-92) குடாநாடு தழுவிய அளவில் நடைபெற இருக்கும்வெகுசனப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ்-பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவிலடி, காங்கேசன்துறை வீதியிலுள்ள காரியாலய முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாக இருப்பதாக சங்கத் தலைவர் திரு. அ. அல்பேட் அறிவித்துள்ளார். (21)

---

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

அளவெட்டி கணேஸ்வரத்திற்கும் சுன்னாகம் பிரதான சந்திக்குமிடையில் ஒரு பவுண் நிறையுள்ள கைச்சங்கிலி தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் பா. தெய்வேந்திரன், பதிவாளர், கணேஸ்வரம், அளவெட்டி என்ற விலாசத்திற்கு அல்லது சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவும்.
2180

### தவறிவிட்டது

மானிப்பாய்க்கும் ஓட்டுமடத்திற்கும் இடையில் துணி பாக்குடன் உடுப்புகளும் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் 70,பலாலிறோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்என்னும் விலாசத்தில்ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(2177)

### வைத்திய சேவை

நலைமுடி வளர, தரைமாறுவதற்கும் மாதவிலக்கு கோளாறு, முகப்பரு நீடித்த வாதரோகம் ஆஸ்த்மா குழந்தைப்பாக்கியம் போன்ற சகல நீடித்த வியாதிகளுக்கும் சிறந்த மெய்ஞ்ஞான ஆலோசனைபடி நுண்ணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம் காலை 9-00 - 12-00 மணி மட்டும். டாக்டர் எம். கருணாதரன் வேளாங்கண்ணி வைத்தியசாலை 614, ஓட்டுமடம், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம், (2719)

### வகுப்புகள்

ENGLISH GRAMMAR AND SPOKEN ENGLISH ஆங்கில இலக்கணமும் ஆங்கிலத்தில் பேசுவதும் சகல தரத்தினருக்கும் ஆரம்பத்திலிருந்து இங்கிலாந்து முறைப்படி கற்பிக்கப்படுகிறது. V. N. KANDASAMY A. I. B. PART I (London) INTER (London) 87,கொக்குவில் திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அருகாமையில்) கொக்குவில்.
(2178)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





வீரவேங்கை
லெப்.பேனாட்
பிறப்பு....1972

வீரவேங்கை
வினோதன்
பிறப்பு....1971

தச்சன்காட்டு மோதலில்
வீரமரணம் 04-02-1991

ஆங்கில ஆதிக்கம் அகன்றதென
சிங்கள ஆதிக்கம் ஆர்ப்பரிக்கும் நாளிது
எங்கள் மண்ணிதை மீட்டிடவென்றே
பொங்கி எழுந்தீர்! போர்க்களம் புகுந்தீர்!
தங்கும் நும்புகழ் தரணியின் மீது
செங்களமாடிச் சுதந்திரம் சுவைத்து.

- நண்பர்கள்

செல்வநாயகபுரம்,
திருக்கோணமலை (2181)

---

## நினைவு கூருகின்றோம்
## 1992-02-04

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய
❋ கந்தசாமி துரைநாயகம் [ எல்.பி. 03, மூதூர் ]

1986ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
பரிசுத்தம் [ கணபதிப்பிள்ளை ஆத்மராஜா - கல்முனை-03 ]

1988ஆம் ஆண்டு கிளிநொச்சியில் தேசவிரோதிகளால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட
❋ ஜோன்சன் [எஸ். மாசிலாமணி - முரசுமோட்டை, கிளிநொச்சி ]
❋ சுதர்சன் [ சுபரூபன் - கிளிநொச்சி ]
❋ விக்டர் [ வி. தவநாயகம் - கிளிநொச்சி ]

மூதூரில் சிறிலங்காப்படையினரும், ஊர்காவற் படையினரும் சுட்டதில் வீரச்சாவெய்திய
❋ வரதன் [ சீனித்தம்பி வரதராசன் - பாலத்தோப்பூர் மூதூர் ]

மட்டக்களப்பில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

1989ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர்கள் ஈரோஸ்] அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3882)

# பிரேமதாசா

# எப்படிப்பட்ட மனிதர்?

பிரேமதாசா ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறிய பொழுது இலங்கைத்தீவு வன்முறைச் சுவாலைகளால் எரிந்துகொண்டிருந்தது. வடகிழக்கில், அமைதி கலைக்க வந்த அனுமார் படை புலிகளுடன் போரிட்டுக்கொண்டிருந்தது. தெற்கில், விஜயவீராவின் செம்படை இரத்தக் களரியை ஏற்படுத்தி வந்தது. புதிதாகப் பதவியேற்ற பிரேமதாசா இந்த வன்முறைப் புயலுக்குள் சிக்கித் தத்தளித்தார்.

இலங்கைத் தீவு ரணகளமாய் மாறியதற்கு இந்தியத் தலையீட்டே காரணமென பிரேமதாசா எண்ணினார். இருட்டில்கறுப்புப் பூனையைத் தேடிய குருடன் போல ரஜீவின் இராணுவம் பிரபாகரனைத் தேடி அலைகிறது. தெற்கில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிராக கிளர்ந்த இயக்கம் சிங்களவர் மத்தியில் ஒரு சகோதர யுத்தத்தை தோற்றுவித்திருக்கிறது. இப்படியாக வடக்கிலும் தெற்கிலும் வன்முறைப் பேய் நர்த்தனமாடுவதற்கு இந்திய இராணுவ ஊடுருவல்தான் காரணமென பிரேமதாசா ஊகித்தார்.

போர்க் கலையில் மேதையான பிரபாகரனை ரஜீவின் அதிரடிப் படைகளாலும் அணுகிவிட முடியவில்லை. புலி வேட்டையில் இறங்கிய இராணுவத்தை புலிகள்தான் வேட்டையாடி அழிக்கின்றனர். இந்த யுத்தம் முடிவில்லாமல் தொடர்ந்தால் இந்திய இராணுவம் இலங்கையில் நிரந்தரமாக குந்திவிடும். இதனால் தென்னிலங்கையிலும் கலகக்காரர்களின் கை ஓங்கிவிடும். இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதானால் இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதானால் பிரபாகரனுக்கு நேசக்கரம் நீட்டவேண்டும். இப்படியாக சிந்தித்த பிரேமதாசா விடுதலைப் புலிகளை பேச்சுக்கு அழைத்தார். ஜனாதிபதி ஆசனத்தை கெட்டியாகப் பிடித்துக்கொள்ள பிரேமதாசாவுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.

இலங்கைத் தீவை இந்தியா ஆக்கிரமித்துள்ளது என்றும் இறைமையை விழுங்கி விட்டது என்றும் போர் முரசு கொட்டி வந்த ஜே. வி. பி. இயக்கம் இந்திய இராணுவத்திற்கு எதிராக ஒரு கல்லை வீசவும் துணியவில்லை. சிங்கள இராணுவமும் பெட்டிப்பாம்பு போல அடங்கிக் கிடந்தது. தென்னிலங்கைத் தேச பக்தர்கள் இந்திய இராணுவ பூதத்திற்கு நடுங்கிநிற்க பிரபாகரன்

2

மட்டும் துணிந்து நின்று பாரதப் போரை நடத்தியது பிரேமதாசாவை வியக்கவைத்தது. இனால் உண்மையான தேசாபிமானி யார் என்பதை அவர் உணரத் தவறவில்லை. அதுமட்டுமன்றி, ஆணவம் பிடித்த பிராமணிய சாம்ராஜ்யத்தைஎதிர்த்துநிற்பதானால் அவருக்கு ஒரு பலமான, திடமான ஊன்றுகோல் தேவைப்பட்டது. எனவே பிரபாகரனுடன் சமரசம்செய்ய பிரேமதாசா விரும்பினார்.

இந்திய அரக்கர் படையை தமிழ் மண்ணிலிருந்து விரட்டியடிக்க விரும்பிய புலிகளுக்கு பிரேமதாசாவின் நல்லெண்ணக்கை நீட்டல் நழுவவிட முடியாத நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்தது. இலங்கைத் தீவின் இரு வரலாற்று எதிரிகளும் கொழும்பில் கைகோர்த்துக் கொண்டபோது இந்து சமுத்திர தென்பிராந்தியத்தில் ராஜீவ் கட்டிய ராஜதந்திரக் கோட்டை தளர்ந்துவிழுந்தது. வன்னிக் காட்டில் கெரில்லாப் போரையும், கொழும்பு நகரில் ராஜதந்திரப் போரையும் ஒரே சமயத்தில் புலிகள் முடுக்கிவிட்டதால் இந்தியா செய்வதறியாது திணறியது. எதற்காக இங்கே வந்தோம் என்பது புரியாது இந்திய அமைதிப் படைத் தளபதிகள் அங்கலாய்த்தனர். புளியம் கொப்பை பிடித்த துணிவில் பிரேமதாசா இந்திய வல்லாதிக்கத்திற்கு சவால்விடத் தொடங்கினார். இந்திய துருப்புக்கள் வெளியேற வேண்டும் எனக் காலக்கெடுக்களை விடுத்தார் தனது படைகளை வெளியேற்றிக்கொள்வதைத்தவிர இந்தியாவுக்குவேறு வழி இருக்கவிலலை.

ஆரம்பத்தில் கொழும்புப் பேச்சுக்கள் அமைதியானசுமூக சூழலில் அந்தரங்கமாக நடந்தது. இந்திய இராணுவத்தை வெளியேற்றவேண்டும் என்ற பொது நோக்கில் ஈர்க்கப்பட்டதால் இரு தரப்பினரும் முரண்பாட்டுக் களத்தில் பிரவேசிக்க விரும்பவில்லை. தமிழீழத்தில் இந்திய இராணுவம் புரிந்து கொண்ட அட்டூழியங்களை கொழும்பு தகவல் தொடர்பு சாதனங்கள் வாயிலாக உலகிற்கு அம்பலப்படுத்துவதில் புலிகள் அக்கறை காட்டினர். இதற்கு வலுவூட்டும் வகையில் அரசு - புலிகள் கூட்டறிக்கைகளும் வெளிவந்தன. பிரேமதாசா புலிகளை சந்திக்கும் பொழுதெல்லாம் தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை திருப்பி திருப்பி வாசித்துக்காட்டினாரே தவிர தமிழர் பிரச்சினையின் அடிப்படைகள் எதையும் தொடவில்லை. இரு தரப்பினரும் மிகவும் சாதுரியமாக தத்தம் நலன்களைப் பேணுவதில் கவனத்தை செலுத்தினர்.

ஒருபுறம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திக்கொண்டு மறுபுறம் ஜே. வி. பி இயக்கத்திற்கு எதிராக ஈவிரக்கமற்ற யுத்தம் ஒன்றை ஏவிவிட்டிருந்தார் பிரேமதாசா. ஆயுதப் போர்க் கலையின் அனுபவமற்ற, வலது குறைந்த இடதுசாரியான ரோகண விஜயவீரா தவறான போர்முறைகளை திட்டங்களை பகிரங்கமாகஅறிவித்து வந்தார் சிங்கள பொலிஸ் இராணுவ குடும்பங்கள் மீது அவர் பிரகடனம் செய்த விபரீதப் போர் அவரது வீழ்ச்சிக்கு வழிகோலியது. விஜயவீரா உயிரோடு பிடிபட்ட



போது அரசிடமிருந்து கருணை பெறும் நோக்கில் தனது தோழர்களின் இருப்பிடங்களை எல்லாம் காட்டிக் கொடுத்தார். இறுதியில்பிரேமதாசாவை நேரில் சந்தித்து மன்னிப்பு கேட்க விரும்பினார். ஆனால் பிரேமதாசா இவரை சந்திக்கவுமில்லை; மன்னிப்பு வழங்கவுமில்லை விஜயவீரா கொலைசெய்யப்பட்டார். இரவோடு இரவாக நடந்த இந்த பயங்கர மர்மக் கதை வெளி உலகிற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

விஜயவீராவின் அகால மரணத்தோடு அவரது இயக்கமும், இயக்க ஆதரவாளர்களும், ஆதரவாளர்களின் ஆதரவாளர்களும் ஈவிரக்கமின்றி அழித்தொழிக்கப்பட்டனர். புனித பௌத்த பூமியின் இரத்தம் பிரளயம் எடுத்தது. இந்தக் கொடுமைகளை எல்லாம் கண்டும் காணாததுபோல போதிசத்துவர் புலிகளுக்கு தர்மம் போதித்தார். சாந்தி சமாதானம், சத்தியம் பற்றி பேசினார். இனஐக்கியம்பற்றி கூறினார்.

இந்தியப்படைகள் வெளியேறியது. தென்னிலங்கையில் அமைதி தோன்றியது. பிரேமதாசாவின் சகுனங்கள் நீங்கியது. இனித்தமிழர் பிரச்சினை தான் எஞ்சி நின்றது.

தமிழர் பிரச்சினையை எவ்வாறு அணுகுவது? புலிகளிடம் எதுபற்றிப் பேசுவது? புலிகள்

**பிரம்மஞானி**

இபக்கத்தை எப்படிக் கையாளுவது? பிரேமதாசாவுக்கு ஒரு புதிய சவால் எழுந்தது.

[தொடரும்]

---

# "விழித்தெழுந்த சிங்கம்"

''நான் உனக்குப் பிறந்த தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்''- இவ்வாறு புலி சிங்கத்தைப் பார்த்து விளித்தது.

தூக்கம் கலைந்து எழும்பிய சிங்கம், தலையை உயர்த்திப் பார்த்தபடி, ''உன்னுடைய பிறந்தநாளும் இன்றுதான் ஆக்கும் என்று நினைத்தேன்'' என்றது.

''இதற்காகத்தான் இந்த விவாதம் எல்லாம்- இல்லையா?'' என்று கேட்டது புலி.

''உனக்கும் ஒரு பிறந்த நாள் தேவைப்படுகிறது ..'' என்றது சிங்கம்.

''அது சரிதான் என்று பதிலளித்த புலி, உன்னுடைய பிறந்த நாளை எல்லோரும் கொண்டாட விரும்புகிறார்கள்'' என்றது

''ஆமாம். ஆனால் பிறந்த நாளை கொண்டாடுவதில் என்ன இருக்கிறது?'' என்று சிங்கம் அங்கலாய்த்தது.

''ஏன் கொண்டாடக் கூடாது?''

''எனது உருவப் படத்தைத் தாங்கிய கொடியை எனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை ஒட்டி ஐந்து நாள்கள் பறக்க விடப்போகிறார்கள். அவர்கள் அதைப்பறக்கவிடும் லட்சணத்தைப் பார்த்துக் கொள்.''

''அதில் என்ன பிழை இருக்கிறது?''

''ஒவ்வொரு வருடமும் இந்தக் கொடியை பறக்க விடும்படிமக்களுக்குச் சொல்ல வேண்டியுள்ளது. அல்லது எல்லோரும் கொடி ஏற்ற வேண்டும் என்பதை அறவே மறந்து விடுவார்கள்''

''ஒரு கொடியுமே ஏற்றப்படாமல் இருப்பதை விட அப்படிச் சொல்லிக் கொடியேற்றுவது நல்லது'' என்றது புலி.

''உனக்கென்ன வேண்டும் உனக்கென்று ஒரு கொடி தானே வேண்டும்?'' என்று கேட்டது சிங்கம்

''கொடியில் மூன்றிலொரு பகுதியில் என்னுடைய படமும், மூன்றில் இரண்டு பகுதியில் உன்னுடைய படமும் இருந்தால் எப்படியிருக்கும்?''

''எனக்கு விருப்பம்தான் ஆனால் உன்னை என்னால் நம்ப முடியவில்லை ..'' என்று சிங்கம் பதிலளித்தது.

''சரி! புலிகளும், சிங்கங்களும் உயிரிழப்பதை நான் விரும்பவில்லை'' என்றது புலி.

''எனக்கும் அதுதான் விருப்பம்,'' என்று சிங்கம் பதில் சொல்லியது.

''எப்படியிருந்தாலும் குட்நைற். எனது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.''- புலி விடை பெற்றது

'இல்லை'' என்று மறுப்புத் தெரிவித்த சிங்கம், ''நான் தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். திரும்பவும் என்னை நித்திரை செய்ய வைப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.'' என்றது.

(சண்டே ரைம்ஸில் வந்த உருவக் கதை ஒன்றின் சுருக்கம். நன்றி; 5th Column-Sunday Times)

---

# ஆணையிடும் நிலையில் அமைச்சர் தொண்டமான்

## சு. கட்சி எம். பி. கிரியெல்ல

அமைச்சர் தொண்டமான் அரசுக்கு யோசனைகளைத் தெரிவித்துக் கோரிக்கை எழுப்புவதோடு மட்டும் நிறகவில்லை, அரசுக்கு ஆணையிடும் நிலைக்கு வந்துள்ளார். என்று சுதந்திரக்கட்சியின் கண்டி மாவட்ட எம். பி லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார் இந்த நிலைமை1977 க்கு பின்னர் பதவியேற்றவர்களாலேயே ஏற்பட்டதென மல்வத்தை பீட மகாநாயக்கர் ரம்புக்வெல விபாஸி தேரருடன் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறினார்.

இச் சந்திப்பின் போது மகாநாயக்கர் மலையகப் பகுதி நிலைமை தொடர்பாகவும், தொண்டமான் மேற்கொண்டுள்ள நிலை தொடர்பாகவும் தமது கருத்துக்களை வெளியிட்டதாகத் தெரியவருகிறது.

படிப்படியாக தனது உரிமைகளை இழந்து வரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எம். பிக்கள் தமது எதிர்ப்புக் குரலை எழுப்பினால் தாம் தமது கடமையை ஆற்ற முடியும் எனவும் மகாநாயக்க தேரோ வலியுறுத்தினார். அத்துடன் உரிமைகளை வலியுறுத்துவதில் ஒற்றுமையை கட்டிக்காக்க வேண்டியதையும் சுட்டிக்காட்டினார்.

பெரும்பான்மைச் சமூகத்தின் எதிர்ப்புக் குரலை வெளிப்படுத்தவும், உரிமைகளை வென்றெடுப்பதற்குமான இயக்கத்தின் தலைமைப் பாத்திரத்தை ஏற்கும்படி திரு. லக்ஸ்மன் கிரியெல்ல மகாநாயக்க தேரோவிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் தமது அண்மைய வடபகுதி விஜயத்தின் மூலம் மக்களுக்கு ஒரு வகையில் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக தேரோ எம். பியிடம் சுட்டிக்காட்டினார்.

## அமெரிக்க

தமிழ்அகதிகளை இந்திய அரசு திருப்பி அனுப்புவதாக வாஷிங்டன் நகரை மையமாகக் கொண்டியங்கும் 'ஏசியா வாச்' என்ற மனித உரிமை அமைப்பும் கண்டித்துள்ளது. முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ஹெரி பார்ண்ஸ் தலைமையில் இயங்கும் ஏசியா வாச்சின் அகதிகள் பற்றிய நிலையை அறிந்து கொள்ளும் குழு. அகதிகளை அனுப்புவதை நிறுத்தி வைக்கும்படி புதுடில்லியைக் கேட்டிருப்பதோடு, அகதிகளுக்கான ஐ நா. அமைப்பு உயர் ஸ்தானிகரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் நாடு திரும்ப விரும்பும் அகதிகளை திருப்பி அனுப்பும்படி வற்புறுத்தியுள்ளது.

ஏசியா வாச்சின் பேச்சாளரான பற்றிக்கா கொஸ்மான் இலங்கை திரும்பும் அகதிகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதையும், அவர்களை மீளக்குடியமர்த்துவதையும் உத்தரவாதம் செய்யும்படி அகதிகளுக்கான சர்வதேசக் கண்காணிப்புக் குழுவைக் கேட்டுள்ளார்.

---

# செஞ்சிலுவைச் சங்க பரீட்சார்த்த முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை பாடசாலை மாணவர்களுக்கு மின்சாரம் வழங்க எடுத்த திட்டம்வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகள் தோறும் பாடசாலை மாணவர்களுக்குஇரவு வேளைகளில் மூன்று மணிநேரம் மின்சாரம் வழங்குவது என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியது தெரிந்ததே.

இத்திட்டம் முதல் தடவையாக கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த வாரம் முதல் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தினமும் மாலை ஆறு மணி முதல் ஒன்பது மணிவரை மின்சாரம் ஜெனரேற்றர் மூலம் வழங்கப்பட்டது இதன்மூலம் ஆயிரத்து ஐந்நூறு மாணவர்கள் பயனடைவர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் முப்பத்தைந்து மாணவர்களே சமுகமளித்தனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இத்திட்டம் விரைவில் கைவிடப்படலாம் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

---

## மகஸீன்

களை சிறிலங்கா இராணுவம் தாண்டிக்குளம் தடைமுகாமில் கைது செய்து பூஸா தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைத்தது. இவர்கள் அனைவரும் சமீபத்தில் மகஸீன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனராம்.

கடந்த 28 ஆம் திகதி குறிப்பிட்ட பெண் சிறைச்சாலையில் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார் என்று தகவல் கிடைத்தது. அதுபற்றி அறிந்து கொள்வதற்காக அவரது கணவர் கொழும்பு சென்றுள்ளார்.

இம் மரணத்திற்கான உண்மைக் காரணம் இன்னமும் அறியப்படவில்லை. (தி)

# ஆளும் கட்சி எம். எல். ஏ. களுக்குப் அஞ்சி நடுங்கும் தமிழக மக்கள்

இன்று தமிழ் நாட்டு மக்கள் ரொம்பப் பயந்த சூழ் நிலையிலேயேவாழ்கிறார்கள். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் சென்று நீங்கள் யாருக்காக இவ்வளவு தூரம் பயப்படுகிறீர்கள்? புலிகளுக்காகவா? அல்லது தி. மு. க. அல்லது அதன் தோழமைக் கட்சிகளுக்காகவா என்று வினவினால் அவர்களிடம் இருந்து வரும் பதில் நாம் யாருக்காகவும் இவ்வளவு தூரம் பயப்படவில்லை தமிழ் நாட்டை ஆளும் அ. தி. மு. க. வைத் தவிர. இவ்வாறு தான் இன்று தமிழ் நாட்டு மக்களின் மனோநிலை.

முதல்வர் ஜெயலலிதா தி. மு. கவை ஓரங்கட்டி அடக்க சாட்டையைக் கையிலெடுக்கும் போதே அடங்காமல் போய்க் கொண்டிருப்பது அவருடைய கட்சி எம். எல். ஏக்கள் தான்.

இக்கட்சி எம். எல். ஏக்கள் கொள்ளையடிப்பது, அதிகாரிகளைத் தாக்குவது, உள்ளூர் நிர்வாகத்தில் தலையிடுவது இது தவிர தங்கள் சாம்ராஜ்யத்திற்குள் ஊடுருவதாக எம். எல். ஏக்கள் கருதும் அ. தி. மு. க. மாவட்ட செயலாளர்களைத் திடீர் தீர்ப்பு, காவல்நிலையங்களையும், நிதியுதவியையும் வழங்குவதில் திருப்திபடுத்த வேண்டிய கட்சி நிர்வாகிகளையா எம். எல். ஏக்களையா என்று முடிவு செய்ய முடியாமல் தடுமாறும்அளவுக்கு வகைமாரி கடுமையாக இருக்கிறது. பல அமைச்சர்கள்தங்கள்மாவட்ட பயணத்தை ரத்துச் செய்யுமளவுக்கு ஜெயலலிதாவின் அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் தான்தோன்றித்தனமாக பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைகளை அடக்குவதற்காக செல்வி ஜெயலலிதா நவம்பர் மாத நடுவில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை கூட்டி எம். எல். ஏக்கள் மீதான புகார் காண்டத்தை படிக்கச் சொல்லிக் கேட்டார். அதற்குப் பிறகு மாவட்ட கலெக்டர்களையும்பொலிஸ் சூப்பிரின்டன்களையும் தனித்தனியே தன் வீட்டில் சந்தித்து வரம்பு மீறுகிற எம். எல். ஏக்கள் மீது தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திஉரியநடவடிக்கை எடுக்கும் படியும் அதனை தனக்கு இரகசியமாகத் தெரிவிக்கும்படியும் கேட்டுள்ளார்.

ஆனால் கட்சி எம். எல். ஏக்களாலும் அவர்களது உறவினர்களாலும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அட்டூழியத்தை ஒரு பெரிய பட்டியல் போட்டாலும் முடியாது. இவற்றை எவ்வாறு அடக்கப் போகிறார் என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

செல்வி ஜெயலலிதாவுக்கு ஏற்படும் இந்த தர்மசங்கடமான நிலைமைகள் அவரது எதிரிகளான தி.மு.க. வினருக்குப்பெரும் கொண்டாட்டமாகவே உள்ளது.

தி. மு. க வின் செய்தித் தொடர்பாளரான ஆலடி அருணா அ. தி. மு. க. வில் பரவிக் கிடக்கும் ஒழுங்கீனத்திற்கான காரணம் புதிர் ஒன்றுமில்லை என்கிறார். சமீபத்திய சட்டமன்ற தேர்தலுக்கான அ. தி. மு. க. வேட்பாளர் தேர்வு அவர்களுடைய வங்கிக்கணக்கு மீதிகளை வைத்துத்தான் தீர்மானிக்கப்பட்டதே தவிர அவரவர்களின் அரசியல் பணிகளை வைத்து அல்ல என்று கூறுகிறார். மேலும் அ. தி. மு. க எம். எல். ஏக்களில் 60 பேர் புது முகங்கள். வேட்பு மனு தாக்கல்செய்வதற்குமுன்கட்சியிலேயேஇல்லாதவர்கள். அவர்கள் மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? என்கிறார்.

இவ்வாறு இந்த அ.தி.மு.க. கட்சிக்காரர்களிடையே ஒழுங்குக்குறைவு ஏற்படுவதற்கும், கட்சி மேலிடத்திற்கும், தொண்டர்களுக்கு மிடையே தொடர்பு இல்லாததுதான் காரணம் என பல கட்சிக்காரர்கள் கருதுகிறார்கள். 'தலைவருக்கும் அமைச்சருக்கும், அமைச்சருக்கும் எம். எல். ஏக்களுக்கும், எம். எல். ஏக்களுக்கும் அடிமட்டத் தொண்டர்களுக்கும் தொடர்பில்லாததால் இப்படி இருக்கலாம். ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வதே சீர்குலைந்திருக்கிறது' இவ்வாறு கட்சியின் மூத்த அ. தி. மு. க தலைவர்கள் எம். எல். ஏக்கள் விடும் தவறுகளுக்கு காரணம் சொல்கின்றனர். செல்வி ஜெயலலிதாவை பார்க்கக்கூட முடியாமல் இருக்கிறது என்கிறார் அவர். எம். ஜி. ஆர் காலத்தில் சத்யா தோட்டத்திற்கு போகும் மூத்த அமைச்சர்களால் எம். ஜி. ஆரை நேரில் பார்க்க முடியாமல் போனாலும் கூட இண்டர்காம் மூலமாவது அவருடன் பேச முடியும். ஆனால் இப்போதோ முதல்வரை மட்டுமல்ல முதல்வரின் பியூன்களைக் கூட அவர்களால் சந்திக்க முடிவதில்லை என்று குறைபடுகிறார் அந்த அமைச்சர்.

(நன்றி:- இந்தியா ருடே)

## ஜெயலலிதாவின் போக்கு; ஆராய சென்னைக்கு றோ

(சென்னை)

எதிர் காலத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் அரசியல் போக்கு எப்படி இருக்கும்என்று தீவிரமாக ஆய்வு நடத்த மத்திய உளவுத் துறை (றோ) யின் அதிகாரிகள் சென்னைக்கு விஜயம் செய்திருந்தனர்.

முதல்வர் ஜெயலலிதா மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசுவைச் சந்திப்பதாக செய்தி கிடைத்தவுடனேயே இந்த அதிகாரிகள் சென்னைக்கு வந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பு காவற் படைக்கு விசேட பயிற்சி பெற்றோர்

தமிழ் நாட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் காவல் படையில் அதிரடிப் பயிற்சி பெற்ற நூற்றிஇருபது காவலர்கள் முதலணியாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம்சென்னையில் இந்த அதிரடிப்படையின் துவக்க நிகழ்ச்சிகளில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா காவல் துறையின் திறமையையும் சாகசங்களையும் பார்வையிட்டார். ஆயுதமின்றிச் சண்டையிடப் பயிற்சி பெற்ற இக் காவலர்கள், வெடி மருந்துகளைக் கையாளவும் பயிற்றுவிக்கப் பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொல்லப்பட்டவர்ஹரியானா முதல்நிலைச்செயலர் வர்மா

(டில்லி)

ஹரியானாவில் கடந்த சனியன்று மாலை இடம் பெற்ற துப்பாகி சூட்டு சம்பவத்தில் பலியானவர்கள் ஹரியானா முதலமைச்சரின் முதல் செயலாளர் வர்மாவும் அவரதுகுடும்பத்தினரும்ஆவர் நேற்று முன்தினம் பத்திரிகையில் ஹரியான முதலமைச்சரின் குடும்பத்தினர் பலியாகியதாக வெளிவந்த செய்தி தவறானதாகும்.

இதேவேளை இச் சம்பவத்தில் பலியானோர் தொகை ஆறாக உயர்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் பலியாகிய வர்மாவின் இரண்டாவது மகன் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## இந்தியா - ஜப்பானுக்கும் நிரந்தர அங்கத்துவம்

### இந்-ஜப். நட்புறவு சங்கம் கோரிக்கை

இந்தியாவையும், ஜப்பானையும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று புதுடில்லியில் நடைபெற்ற இந்திய-ஜப்பானிய நட்புறவுச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐ.நா. செயலாளர் பூட்டறஸ் காலித்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி தீர்மானத்தில் மேலும் இந்தியும் ஜப்பானிய மொழியும் ஆட்சி மொழிகளாக ஐ.நா. சபையிலும் பயன்படுத்தப்படல் வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (இ)

## சகஸ்ர மஹா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ் நிலைய ஸ்ரீஞான வைரவ சுவாமி ஆலய மண்டல பூர்த்திவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. நவோத்தர சகஸ்ரமஹா சங்காபிஷேகம் இன்று காலை ஆறு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை நடைபெறவுள்ளது.

மெய்யடியார்கள் இன்று நடைபெறும் கிரியைகளிலும் மற்றைய சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து மகேஸ்வர பூஜையிலும் பங்கு கொண்டு பெருமானின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யுமாறு அதன் உபயகாரர் வேண்டுகின்றனர்.

## காங்கேசன்துறைக்கு இரு பாஜ்கள்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் தேவைகளுக்கென காங்கேசன் துறை துறைமுகத்திற்குமேலதிகமாக இரு 'பாஜ்'கள் எடுத்துவரப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தினருக்குத் தேவையான உணவுப்பொருள்கள் மற்றும் ஆயுத தளபாடங்களை இறக்குவதற்கு இவை பயன்படுத்தப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை திருத்த வேலைக்காக எடுத்துச் செல்லப்பட்ட இரு 'பாஜ்'களும் மீண்டும் பருத்தித்துறை இறங்கு துறைக்கு எடுத்துவரப்பட்டிருக்கிறது.

இதனால் பொருள்களை இறக்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன (க)

## அவத்தை பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் சாரணர், குருளைச் சாரண தலைவர்களுக்கான (ஆசிரியர்கள்) அவத்தை II பயிற்சி நெறி கொக்குவில் இந்துக் கல்லூரியில் வரும் 6 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றது என பயிற்சி அமைப்பாளர் இ. ராஜ்குமார் அறிவித்துள்ளார்.

## நல்லதைச் செய்தால் காங்கிரஸ் பாராட்டும்

--வாழப்பாடி

(சென்னை)

தமிழ் நாடு அரசு நல்லதைச் செய்தால் அதைக் காங்கிரஸ் கட்சி பாராட்டும். ஆனால் மக்களைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டால், காங்கிரஸ் கண்டனம் தெரிவிக்கும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கன்னியா குமரி மாவட்டத்தில் பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் நல்ல செயல்களைச் செய்தால் அதைப் பாராட்டுவதும், மக்களைப் பாதிப்பதாக இருந்தால் அதை எடுத்துச் சொல்வதும் எதிர்க் கட்சிகளின் கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

## ஜெயலலிதா-அர்ஜுன்சிங் சென்னையில் சந்திப்பு

சென்னைக்கு வந்துள்ள மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன்சிங் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசினார். அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது ராஜீவ்காந்திக்கு சிறீபெரும்புதூரில் நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான பணிகளுக்காக மட்டுமே தான் சென்னை வந்துள்ளதாகக் குறிப்பிட்டார். சிறீபெரும்புதூரில் ராஜீவ்காந்தி நினைவுச் சின்னம் அமைக்கும் பணி பற்றி முதல்வர் ஜெயலலிதாவுடன் விவாதித்ததாகவும், தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பன் தொடர்புபிரதிநிதியாக செயற்படுவார் என்றும் திரு அர்ஜுன்சிங் குறிப்பிட்டார்.

## ராஜீவ் கொலை வழக்கில் 21-வது சந்தேக நபராக விக்கி

(சென்னை)

பத்மநாபா கொலை வழக்கு தொடர்பாக தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள விக்கி என்பவர், ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருபத்தோராவது சந்தேக நபராக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விசேட புலனாய்வுக்குழு குறிப்பிடுகையில் காவலில் வைக்கப்பட்ட ஏனையவர்கள் அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே விக்கி சந்தேக நபராக சேர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளது.

## முதலாமிடம்

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், றெட்பானா நிறுவனம், ஆகியவற்றுடன் இணைந்து கல்வி - உயர்கல்வி அமைச்சு நடாத்திய தமிழ் கட்டுரைப் போட்டியில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவன் செ. சிறீதரன் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (25)


சாவகச்சேரிப் பகுதியில்

திருமணங்கள்

திருமணம் நிறைவேற்று நிலையம்

ஸ்தாபிதம்:- 05-01-1962 பதிவு இல:- 13109

140, அரசடிவீதி - கந்தர்மடம்

யாழ்ப்பாணம்

பெற்றோர்களே!

மேற்படி திருமண நிறைவேற்று நிலையத்தின் முப்பதாண்டு சேவை நிறைவை முன்னிட்டு சாவகச்சேரி, தபாற்கந்தோர் சந்திக்கருகாமையில் கண்டி வீதியில் கிளை அலுவலகம் 5. 2. 92 புதன் கிழமை காலை 9 மணிக்கு திறக்கப்படுகின்றது.

சாவகச்சேரியிலும் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்கின்ற நீங்கள் உங்கள் பிள்ளைகளின் சாதகங்களை நிலையத்தில் பதிவுசெய்து நீங்கள் விரும்புகின்ற மணமகன், மணமகளைப் பெற்று உங்கள் வீட்டுத் திருமணங்களை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.

இலங்கையில் முதன் முதலாக ஸ்தாபன ரீதியில் தொடங்கி முப்பது வருடகால சேவையில் பல்லாயிரக் கணக்கான திருமணங்களை நிறைவேற்றிச் சாதனை படைத்த ஒரேயொரு ஸ்தாபனம்தான்

"திருமணம் நிறைவேற்று நிலையம்"

வாருங்கள்! பதியுங்கள்!!

திருமணங்களை நிறைவேற்றுங்கள்!!!

அலுவலக நேரம்:

காலை 8.30 முதல் மாலை 5.30 வரை

இயக்குநர்:- புலவர் செ. து. தெட்சணாமூர்த்தி

தலைமை அலுவலகம்
140, அரசடிவீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

கிளை அலுவலகம்
37, கண்டிவீதி
சாவகச்சேரி.
(2173)

**சிந்தனைக்கு**

முற்பகல் விதைப்பது பிற்பகல் விளையும்
- தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

## "தேசப் பாரம்பரியம்"

"மலை நாடு தொண்டமானின் ஆதிக்கத்தின் கீழ் ஒரு இராச்சியமாக மாறி வருகின்றது. இதன் எஜமானராகத் தொண்டமான் இருக்கின்றார்." இவ்வாறு 'ஹேல உறுமய' — தேசப்பாரம்பரியம் — இயக்கத் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின்எம்.பியுமான திலக் கருணரட்ன தெரிவித்துள்ளார்.

'ஹேல உறுமய' அமைக்கப்பட்டதன் நோக்கம், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைச்சர் தொண்டமான் தெரிவித்த தீர்வுத்திட்டத்திற்கு எதிராகச் சிங்கள மக்களை அணிதிரட்டுவதற்கேயாகும். ஆனால், தற்பொழுது 'ஹேல உறுமய' அங்கத்தவர்கள் தீர்வுத்திட்டத்திற்கு எதிராகக் குரல் எழுப்புவதை விட தனிப்பட்ட ரீதியில் அமைச்சர் தொண்டமானுக்கும், மலையக மக்களுக்கும் எதிராகவே குரல் எழுப்புகின்றனர்.

இந்த எதிர்ப்பிற்கு அமைச்சர் தொண்டமான் எதைச் செய்து விட்டார். பல்லாண்டுகளாக நீடித்து வரும் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்விற்கென ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார். அமைச்சர் தொண்டமான் எதை நோக்காக வைத்துத் தீர்வுத் திட்டத்தை முன்வைத்தார் என அறுதியிட்டுக் கூற முடியாவிட்டாலும், பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே செயற்பட்டார். இனப் பிரச்சினைத் தீர்விற்கு இதுவரை முன்வைக்கப்பட்ட தீர்வு திட்டங்களை விட திரு. தொண்டமானின் திட்டம் சற்று முன்னேற்றகரமானது. ஆனால், இத்தீர்வுத் திட்டத்தை விடுதலைப்புலிகள் முழுமையாக ஏற்றுக் கொண்டதாகவோ அன்றி சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றுவதாகவோ வாக்குறுதி அளிக்கவில்லை. இத்தீர்வுத்திட்டமும் ஒற்றையாட்சி முறைக்குள் நின்றே இனப்பிரச்சினைத் தீர்வை முன்வைக்கின்றது. மேலும் அமைச்சர் தொண்டமான் எப்பொழுதாயினும் தமிழீழத்தை ஏற்றுக் கொண்டவரும் அல்லர்.

அமைச்சர் தொண்டமான் மலையகத்தில், ஒரு தனிநாடோ, அன்றி மலையக மக்களின் உரிமைகள் பற்றியோ அத்தீர்வுத்திட்டத்தில், பேசவில்லை. அத்தோடு அமைச்சர் தொண்டமான் அண்மைக் காலத்தில் தொழிலாளர் நலன்களில் பெரியளவில் அக்கறை காட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டும் மலையகத்தில் தற்பொழுது எழுந்துள்ளது.

தென்னாசியாவிலேயே பெரிய தொழிற் சங்கம் ஒன்றின் தலைவரான அமைச்சர் கொண்டமான் மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளுக்கு பிரார்த்தனை மூலம் தீர்வு காணலாம் என்ற நிலையிலேயே தற்பொழுது உள்ளார். அத்தோடு, ஏனைய தொழிற்சங்கங்கள் பலவற்றின் போராட்டங்களுக்கு ஒத்துழைக்காமல் முட்டுக்கட்டை போடுவதன் மூலம் அரசிற்கெதிரான போராட்டங்கள் நடக்காமலும், எழுந்த போராட்டங்கள் தோல்வியடையவும் காரணமாக இருந்துள்ளார். அரசியல் புறச் சூழலினால், மலையக மக்களுக்கு சிங்கள அரசாங்கம் வழங்கிய வாக்குரிமை தனது போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்டு வரும் அமைச்சர் தொண்டமான் அத்தோடு அரசிற்கெதிரான போராட்டத்தையே கைவிட்டுவிட்டார் எனலாம்.

இந்நிலையில், அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக சிங்களப் பேரினவாதிகள் எழுப்பும் கூச்சலானது ஐம்பதுகளில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிராக எழுப்பிய குரலுக்கு ஒப்பானதாகும். ஐம்பது களில் இலங்கைத் தமிழர்கள் மொழியுரிமை மட்டுமே கேட்டார்கள். அதற்கு எதிராகச் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விட்டபோது, அறுபதுகளில் சமஷ்டி அமைப்பு முறையைக் கேட்டார்கள். அதை நசுக்க முற்பட்டபோது எழுபதுகளில் தமிழர் தனிநாடு கோரினர். அதாவது தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கை சிங்களப் பேரினவாத சக்திகளின் கோரமான அடக்கு முறையில் எழுந்த ஒன்றே. தமிழர் இணைந்து வாழ விரும்பாததால் எழுந்ததல்ல. இணைந்து வாழ முடியாது என்ற நிலையில் எழுந்ததாகும்.

அன்று தமிழ் மக்களுக்கு இந்நிலையை ஏற்படுத்தியவர்கள், ஆட்சிபீடம் ஏறமுற்பட்ட சிங்கள அரசியல்வாதிகளே. இன்றும் அவர்களே மலையக மக்களுக்கு எதிராக எழுந்துள்ளார்கள்.

இந்நிலையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி லக்ஸ்மன் ஜெயக்கொடி 1981 இல் வடக்கில் இருந்த நிலை இன்று 1991 இல் மலையகத்தில் உள்ளது எனக் கூறியிருப்பது நிகழ்வுகளைப் பொறுத்துசரியாக இருக்கலாம். ஆனால் ஐம்பதுகளில் சிங்களவர்கள் இருந்தது போன்றே இன்றும் இருப்பதே அந்நிகழ்ச்சிக்கு அடிப்படைக்காரணம் என்பதை திரு. ஜெயக்கொடி போன்றவர்கள் மறந்து விடக் கூடாது.

# அமெரிக்காவும ரஷ்யாவும கூட்டுப்பாதுகாப்பு திட்டம்

(வாஷிங்டன்)

ரஷ்யாவும், அமெரிக்காவும் விரைவில் ஆயுதக் குறைப்பு உடன்படிக்கையொன்றில்கைச் சாத்திடவுள்ளன என அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டிச்சேனி கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் ஆகாய பாதுகாப்புத் திட்டமொன்றை கூட்டாக ஏற்பாடு செய்ய ரஷ்யா கூறிய யோசனையை தாம் வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் நெடுந்தொலைவு அணுவாயுதங்களை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஏற்கனவே கூறியஅளவிலும்பார்க்க குறைப்பதற்கு ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் தெரிவித்த யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டிக்சேனி சி. என். என் தொலைத் தொடர்பு செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது: அண்மையில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நாட்டு நிலைமை பற்றி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது போர் முக்கியத்துவம் வாய்ந்த அணுவாயுதங்களை கடந்த ஆண்டில் சோவியத் யூனியனுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட அளவுடன் கூடவே ஐம்பது சதவிகிதம் குறைக்கப் போவதை அறிவித்து இருந்தார். இதன் மூலம் இருதரப்பிலும் இருக்கக கூடிய ஏவுகணைகளின் எண்ணிக்கை சுமார் நாலாயிரத்து ஐந்நூறுக்கு மட்டுப்படுத்தப்படும் எனவும் ஜோர்ஜ் புஷ் தெரிவித்திருந்தார். ஆனால் ரஷ்ய அதிபர் யெல்சின் தமது யோசனையில் இவ் ஏவுகணைகளை இரண்டாயிரத்து ஐந்நூறாக குறைக்க வேண்டுமெனக்கேட்டிருந்தார். இதனை அமெரிக்கா நிராகரித்து விட்டது என அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் டிக்சேனி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அத்துடன் இந்த ஆண்டின் இறுதிக்குள்ளாக ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையேயான இரு உச்சி மாநாடுகள் நடத்தப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாஸ்கோவிலிருந்து புறப்பட்டுச் சென்ற ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின, பிரிட்டன் பிரதமர், கனடா அதிபர், அமெரிக்க அதிபர் உட்பட மற்றும் பல உலகத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் தமது நான்கு நாள் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

## இரு தரப்பு பேச்சுகளுக்கு ஊக்குவிப்பு தரப்படும்
### --ராவ்-ஷெரீப் சந்திப்பில் முடிவு

இருதரப்பு பிரச்சினைகள் பற்றிய அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதற்காக இரு நாடுகளுக்கு இடையேயும் நெருக்கமான தொடர்புகளைப் பேணிக்கொள்ள இந்தியாவும். பாகிஸ்தானும் இணங்கியுள்ளன.

நேற்று முன்தினம் சுவிற்சலாந்தில் ஆலோசகர்கள், உதவியாளர்கள் எவருமின்றித் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்திய இந்திய பாகிஸ்தானியப் பிரதமர்களும் இரு நாட்டு வெளியுறவுச் செயலாளர்களும் மார்ச் மாதத்தில் சந்தித்துப்பேசுவர் எனத் தெரிவித்தனர். மேலும் இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவும், பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீயும் பேசிய போது காஷ்மீர் பிரச்சினைகளை பற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## அச்சுறுத்தலை சமாளிக்க கூட்டுப்பாதுகாப்பு முறை
### ஐ. நா. பா. சபை அறைகூவல்

உலக அமைதிக்கு ஏற்படும் அச்சுறுத்தல்களை சமாளிக்க கூட்டுப் பாதுகாப்பு முறையை வலுப்படுத்த வேண்டும் என்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்த்துப்போராட வேண்டும் என்றும் நியூயோர்க்கில்நடைபெற்ற ஐ நா. பாதுகாப்புசபையின் முதலாவது உச்சி மாநாடு அறைகூவல் விடுத்துள்ளது.

பதினைந்து நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட இந்த உச்சிமாநாடு படைக் குறைப்பு, ஆயுதக்கட்டுப்பாடு அணு ஆயுதப்பரவலைத்தடுத்தல் தொடர்பாக பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பது என தீர்மானித்து உள்ளது இந்த உச்சி மாநாடு நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது.

**பங்களாதேஷ்**

## குண்டு வெடிப்பில் 14பேர் உயிரிழந்தனர்

(டாக்கா)

பங்களாதேசின் சிட்டகாங் மலைப்பிரதேசத்திலுள்ள ஒருவாவியில் மோட்டார் படகு ஒன்றில் இரண்டு குண்டுகள் வெடித்தமையினால் பதிநான்கு பேர் உயிரிழந்தனர். மேலும் பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர். இக் குண்டு வெடிப்பிற்கு 'சாந்திபாகினி' அமைப்பினரே காரணம் எனத் தெரிய வருகின்றது

சாந்திபாகினி அமைப்பு கடந்த பதினெட்டு ஆண்டுகளாக பங்களாதேசின் "சக்மா" பழங்குடி மக்களுக்கு கூடுதலான சுயாட்சி கோரிப் போராடி வருகின்றது என்பது தெரிந்ததே.

## பதவி உயர்வு கிடைக்க புதிய திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்கபொது எழுது விளைஞர் சேவையிலும், அதனுடன் இணைந்த தரங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு சிரமமான முறையில் பதவியுயர்வு கிடைப்பதற்கு புதியதிட்டமொன்றை பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா அறிமுகப்படுத்தியுள்ளார்.

இத் திட்டத்திற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது இத் திட்டத்தின் படி பதினைந்து வருட சேவையை முடித்துக் கொண்டவர் ள் பரீட்சைக்கு தோற்றாமலேயே தரம் ஒன்றிற்கான பதவி உயர்வுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதன் மூலம் சுமார் முப்பதாயிரம் அரச ஊழியர்கள் நன்மையடையவுள்ளனர் இத் திட்டம் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் காசாளர், களஞ்சியப் பொறுப்பாளர், போன்ற தரத்தினருக்கும் விரிவு படுத்தப்படுமென அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

## தீபிகா பரிசுத் தொகையை திருப்பி அளித்தார்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற ஐந்தாவது சாவ் விளையாட்டுப் போட்டிகளில் பல தங்கப் பதக்கங்களைப் பெற்ற நீச்சல் வீராங்கனை செல்வி தீபிகா சண்முகத்துக்கு தேசிய விளையாட்டுக்கழகம் வழங்கிய ஒரு லட்சத்து எண்பத்துஐயாயிரம் ரூபாவையும் அவரது தாயார் திருப்பிக் கொடுத்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய கல்லூரிகள் விளையாட்டுச்சங்கங்களின் சட்ட திட்டங்களின்படி அமெரிக்க பல்கலைக்கழகத்தில் உபகாரச் சம்பளம் பெற்றுக்கல்வி கற்று வரும் தீபிகா இப்பணப் பரிசைப் பெற்றுக் கொள்ள முடியாது என்ற விதிக்கு இணங்கவே இப்பரிசுப் பணம் திருப்பிக் கொடுக்கப் பட்டதாக தெரியவருகின்றது.

## வைத்தியசாலை கொடிவாரம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்காக வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வரும் கொடிவாரத்தின் ஆரம்ப விழா எதிர்வரும் ஞாயிறன்று மாவட்ட வைத்தியஅதிகாரிகதிரவேற்பிள்ளை தலைமையில், நடைபெறவுள்ளது.

வைத்தியசாலை மண்டபத்தில்நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரான்ஸ்வைத்தியசேவை இணைப்பதிகாரி, யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் வி க. கணேசலிங்கம், யாழ். பிராந்திய சுகாதார சேவை அத்தியட்சகர் என் கனகசபை உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (25)

## சாரணர் சங்கத்தின் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் விசேட கூட்டம் இன்று பிற்பகல் 3-30மணிக்கு நடைபெறவுள்ளது இக் கூட்டத்தில் சாரணர்கள், திரிசாரணர்கள், சாரணத்தலைவர்கள் குருளைச்சாரணர் தலைவிகள், சாரணர் உத்தியோகத்தர்கள் ஆகியோரை கலந்து கொள்ளும்படி மாவட்ட ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இனப்பிரச்சினைகளினால் உலக சமாதானத்திற்கு அபாயம்

## —ஐ. நா. செயலாளர் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

உலக சமாதானத்திற்கு இனப் பிரச்சினைகளால் ஏற்படக் கூடிய அபாய நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஜெனரல் பூட்டோர்ஸ் பூட்டோர்ஸ்-காசி கடந்த வெள்ளியன்று எச்சரித்தார்.

பதினைந்து நாடுகள் அடங்கிய ஐ. நா சபையின் முதல் உச்சி மாநாட்டில் இனப்பிரச்சினைகளை முதன்மைப் படுத்திப் பேசிய அவர், கெடுபிடி யுத்தம் இப்போது முடிவடைந்து விட்டது என்றும், புதிய பிரச்சினைகள் தலை தூக்க நாம் இடமளிக்கக் கூடாது என்றார்.

புதிய தேசிய இனங்கள் முனைப்பாகித் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம் பல்லின நாடுகள் இன அடிப்படையில் பிரிந்து போகிற சூழ்நிலை உருவாகியுள்ளது. இது சமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் புதிய சவாலாக அமைகிறது என்றும்,

நாடுகள் இன அடிப்படையில் பிரிந்து போவதால் ஐ. நா. சபையில் அங்கத்துவம் எண்ணற்றதாகி விடும். இப்போது ஐ நா. சபையில் அங்கம் வகிககும் நாடுகளின் எண்ணிக்கை 166 என்றும் இன அடிப்படையில் நாடுகள் தொடர்ந்தும் பிரிவதால் உலக சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படும் என்றும் இதனால் இனம் மற்றும் இனக் குழுக்களின் சண்டைகள் அமைவதாகவும் அவர் எச்சரித்தார்.

இப்போதுள்ளது போல் நெருக்கடியான கால கட்டம் தற்கால வரலாற்றில் ஐ. நா. சபைக்கு எப்பொழுதும் ஏற்பட்டதில்லை நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வழமையான சமாதானப் பணியை விஸ்தரிக்க வேண்டிய நிலையில் ஐ. நா. உள்ளது என்றார் அவர்.

உள்நாட்டு யுத்தங்கள் இப்போது உள்நாட்டு யுத்தமாக மாத்திரம் அமைவதில்லை. இந்த யுத்தங்களினால் ஏற்படும் பயங்கர விளைவுகள் உலகத்தை அதில் தலையிடாமல் பார்த்துக் கொண்டிருக்க அனுமதியாது என்று மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு விரைவில் மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு விரைவில் மின்சாரம் கிடைக்கவுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக வடக்குக்கு மின்சாரம் வழங்கப்படாதது தெரிந்ததே.

தற்போது மாங்குளம் ஓமந்தைப் பகுதிகளில் திருத்த வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும் தற்போது கிளிநொச்சிக்கு தேவையான எழுபது பரல் மின்மாற்றி ஓயில் எடுத்து வருவதற்கு கூட்டுப் படை தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாரம்இவைமின்மாற்றிகளில் நிரப்பப்பட்டு பரீட்சிக்கப்படும் எனவும் இவ் ஓயிலை திருடர்கள் திருடாது அப்பகுதி பொது மக்கள் பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# வீட்டினுள் அழுகிய நிலையில் பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர்ப் பகுதியில் கழுத்தில் சுருக்கிட்டு தொங்கிய படி கிடந்த பெண்ணின் சடலம் ஒன்று அழுகிய நிலையில் அயலவர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக குறிப்பிட்ட வீட்டுப் பகுதியிலிருந்து வந்த துர்நாற்றத்தை அடுத்து அயலவர்கள் அவ் வீட்டிற்குச் சென்று பார்த்த போது மனுவேற்பிள்ளை றீற்றாம்மா (வயது 41) என்ற விதவைப் பெண் கழுத்தில் சுருக்கிட்டபடி தொங்கிக் கொண்டிருந்ததை கண்டனர்.

அயலவர்களின் தகவலைத் தொடர்ந்து ஸ்தலத்திற்குச் சென்ற தமிழீழ காவல் துறையினர் விசாரணையை மேற்கொண்டபின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச) (21)

# அரசாங்கம் தந்த பணம் சவர்க்காரம்வாங்க போதாது

## பிரதமரிடம் அகதிகள் தெரிவிப்பு

(திருக்கோணமலை)

எமக்கு வழங்கப்பட்ட 250 ரூபா சவர்க்காரம் வாங்கக் கூடப் போதாது என இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய பெண்மணி ஒருவர் சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்காவிடம் கூறியுள்ளார்.

உப்புவெளி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பியோரைபார்வையிட சிறிலங்கா பிரதமர் அங்கு சென்ற போது இவ்வாறு அந்தப் பெண்மணி தெரிவித்தார்.

முகாமில் இருக்கும் பெரும்பாலானோர் சொந்த இடங்களுக்கு செல்லவே விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சொந்த இடங்களுக்கு செல்ல விரும்புவோருக்கு ரூபா இரண்டாயிரம் வழங்கப்படும் என சிறிலங்கா பிரதமர் டி.பி. விஜயதுங்கா அங்கு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

# விடுமுறை நாட்களில் பாடசாலை; தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பு

பூர்த்தியாக்கப்படாத பாடத் திட்டத்தை நிறைவுசெய்வதற்காக விடுமுறை நாட்களிலும் பாடசாலைகளைத் திறப்பதற்கு யாழ். கல்வித் திணைக்களம் எடுத்த நடவடிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்றுள்ளது.

போர்க்காலச்சூழ்நிலையில் இம்முடிவு அவசியமெனவும், இதற்குச் சகல ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. மகாசிவம் வேண்டுகோள்விடுத்திருக்கிறார்.

# சிப்பாய் மகனுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

வடபகுதியில் கொலையுண்ட சிப்பாய் ஒருவரின் பிள்ளைக்கு இடம் ஒதுக்க சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா மத்திய மகா வித்தியாலயம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி இக் குழந்தையின் தாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அனில் முனசிங்கவிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து அவர் விசாரித்தபோது பாடசாலைச் சபை உறுப்பினர்களின் ஆட்சேபத்தை தொடர்ந்து இடம் மறுக்கப்பட்டதாக தெரிய வந்தது.

இதுதானா நம் படையினருக்கு செலுத்தும் மரியாதை எனஅனில் முனசிங்க எம்.பி. வருத்தம் வெளியிட்டார்.

# இன்று வேலைநாள்

(யாழ்ப்பாணம்)

அனைத்து பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் இன்று வேலை நாளாகும். எனவே அனைத்து கூட்டுறவு சங்கங்களும் திறந்து செயல்படவேண்டும் என யாழ். மாவட்ட கூட்டுறவு சபை அறிவித்துள்ளது.

# 2 ஆம்லெப். ஜேம்ஸ்

## விளையாட்டுப் போட்டி

இரண்டாம் லெப். ஜேம்ஸ்சின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும் ஞாபகார்த்தவிளையாட்டுப் போட்டியும் நாளை புதன்கிழமை அராலி சின்னசுதாவிளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

அராலி கலைமகள் சனசமூக நிலையமும், அருள்ஜோதி சனசமூக நிலையமும் இணைந்து இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களும் அஞ்சலி உரை நிகழ்த்த உள்ளனர்

# ஆசிரியர் பயிற்சி நிலையம்

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் யாழ்ப்பாண கிளை நிலையம் நாளை காலை 9-00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. மேற்படி நிலையத்தில் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதே போன்ற கிளை நிலையங்கள் கரவெட்டி, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (க)

### திட்டமிட்டபடி

தேசிய அடையாள அட்டை, அஞ்சல் அடையாள அட்டை. கடவுச்சீட்டு இவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தலாம் எனவும் எக்காரணம் கொண்டும் புகைப்படம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சை சமகாலத்தில் வடமாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளன. யாழ். மாவட்டத்தில் பதினாறு பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான சகல ஒழுங்குகளையும் யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது.

இப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்துவதற்காக கொழும்பு பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் படவுள்ளது. (ச)

### வல்வை

படகை இழக்க வேண்டிய நிலை ஏறபட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை மூன்று மணியளவில் இடம்பெற்றது.

சுமார் 20 நிமிட நேரம் கடற்படையினர் இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

### ஆசிரியர்களை

களையும் கலந்து கொள்ளும்படி தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது. இதன் மூலம் மாணவர் உலகுக்கும் சமூகத்திற்கும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் செயற்பட வேண்டும் எனவும் கூறப்பட்டிருக்கிறது.

### சமஷ்டி

மாகத் திருத்தத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றாலும் அதற்கான பெயரை வைத்து அந்த முறையை முன்னெடுத்துச் செல்லலாம் என்று ஜா சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,சமஷ்டி என்ற சொற்பிரயோகத்தைக் கேட்டு மக்கள் அஞ்சத் தேவையில்லை இந்தியாவில் பெருந்தொகையான மக்கள் சமஷ்டி ஆட்சிமுறை இந்தியாவுக்குப் போதாதென்று நினைக்கிறார்கள். இப்போதுஇந்தியாவிலிருக்கும் சமஷ்டி ஆடசியை விட நெகிழ்ந்துகொடுக்கக்கூடிய சமஷ்டி ஆட்சியை இந்திய மக்கள் விரும்புகிறார்கள். எனவே சமஷ்டி என்ற சொல்லைக் கேட்டு மக்கள் இனிமேல் பயப்பட வேண்டிய அவசியமில்லை என்றார்.

சமஷ்டி என்ற சொல் இலங்கையில் அவ்வளவாக எடுபடாது என்பதை ஏற்றுக் கொள்ளும்ஜா சமஷ்டிஅமைப்பு முறைகளை நெருக்கமாகவும், புதிதாகவும் அணுகுவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்றார்.

ஜூலை 87 இல் இந்தியா மத்தியஸ்தம் வகித்துச் செய்து கொண்டஉடன்படிக்கை கஷ்டமான காரியமாகும். அந்த உடன்படிக்கை காத்திரமானதும், பரீட்சித்துப் பார்க்கக் கூடியதுமாகும். ஏனெனில் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இது ஒரு அடிப்படையாகும் என்றும்-

இன்றைய தேவைக் கேற்றபடி அந்த உடன்படிக்கையில் உள்ளவற்றை சிறிலங்கா திருத்தியமைக்கலாம். இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஐந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. கடந்த கால அனுபவங்களைக் கருத்திற் கொண்டு இந்த உடன் படிக்கையில்திருத்தங்களைச்செய்து செம்மைப் படுத்தலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு இந்த கைங்கரியத்தைத் தீர்த்து வைக்கலாம் என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

### பழுதான

குறித்து இராணுவத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கவச வாகனங்களின் தரம் குறைவாக இருப்பது பற்றியும் சிறிலங்காப் படையின் கவச வாகனப் பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் அரசாங்கத்திடம்முறைப்பாடு செய்துள்ளார்கள். மேலும் இந்த வாகனங்களும் சீனாவிடமிருந்து தருவிக்கப்பட்ட போராயுதங்களும் போரில் உபயோகிக்க உகந்தவையல்ல என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அதிருப்திதெரிவித்துள்ளன. இதனைத் தொடர்ந்து இவ்வளவு காலமும் சீன ஆயுதக் கொள்வனவு தொடர்பாக மௌனம் சாதித்து வந்த சிறிலங்கா அரசு சீன அரசுடன் தொடர்பு கொள்ள உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சீனாவுடன் தொடர்பு கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் கவச வாகனங்களைப் பாவிக்க முடியாத பின்னடைவு நிலை ஏற்படும் என்றும், இது இராணுவத்தில் பயங்கர அபாய நிலையைத் தோற்றுவித்திருப்பதாக கவச வாகனப் பிரிவுத் தளபதி தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கைகளின் போது காலாட்படை வியூகம் வகுத்து எளிதில் படைகளை நகர்த்துவதற்கு உதவும் வகையிலேயே இந்தச் சீனத் தயாரிப்பான கவச வாகனங்கள் போர் முனையில் உபயோகிக்கப்படவிருந்தன. கவச வாகனங்கள் இல்லாமலிநப்பது யுத்த முயற்சிகளுக்குத் தடையாக அமையும் என்று இராணுவ வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

சீனடாங்கிகள் பயனற்றவை என்று இராணுவ அதிகாரிகளால் கழித்து விடப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு இது பற்றி விசாரணை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது கவச வாகனங்களைப் பரிசீலனை செய்ய ஒரு குழுவை இராணுவ தலைமைப்பீடம் ஏன் சீனாவுக்கு அனுப்பத் தவறியது என்பது குறித்து சில இராணுவ வட்டாரங்கள் ஆச்சரியம் தெரிவித்துள்ளன. சிங்கப்பூரும், மலேசியாவும் சீனாவிடமிருந்து கவச வாகனங்களைக் கொள்வனவு செய்ய முன் வந்ததைத் தொடர்ந்தே சிறிலங்கா இராணுவ அதிகாரிகளும் சீனாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனா நோத் இன்டஸ்றீஸ் காப்பரேஷன் என்ற நிறுவனத்திடமிருந்தே18ரி-85,ரி-86ரகக் கவசவாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்த வாகனங்கள் புதிய தயாரிப்பாதலால் சீன இராணுவத்தால் கூடப் பரீட்சித்துப் பார்க்கப் படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

மேலும் கொள்வனவு செய்யவிருந்த ஆயுதங்களை பரிசீலித்துப்பார்ப்பதற்கு ஒரு குழுவை அனுப்பி வைக்கும்படி சீனா விடுத்த வேண்டுதலைக் கூட இராணுவத் தலைமை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### பலாலி

இதேவேளை தச்சன் காட்டுப் பகுதியிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரணிலிருந்து 50 கலிபர் துப்பாக்கி பிரயோகமும் செய்யப்பட்டது.

### விவசாய

இளம்பருதி, தமிழீழ ஆய்வு நிறுவனப்பொறுப்பாளர் திரு. ரவி மற்றும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் மாவட்டப் பொறுப்பாளர்கள் திரு.நடா, திரு கௌரி, மற்றும் சந்திரகுமார் ஆகியோரும் சில தொண்டர் ஸ்தாபனங்களின் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவில் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் ஏனைய பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர்.

விவசாய கண்காட்சியும் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. விவசாயிகளின் பல்வேறு விவசாயப் பிரச்சினைகளுக்கு இங்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் விளக்கம் அளித்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

.02.1992